# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



**கர்த்தாவே,**
**சிறுமைப்பட்டவர்களுடைய**
**வேண்டுதலைக்கேட்டிருக்கிறீர்;**
**அவர்கள் இருதயத்தை**
**ஸ்திரப்படுத்துவீர்.**

பொழிவு: 13
ஆகாரம்: 09

Sep '2021

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யென்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
| --- | --- | --- |
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 | FRIDAY'S<br>4:00 PM – 5:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. AUGUSTA LAWRANCE<br>056 641 1676 |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |

## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: 1ST FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
**Email: csitcalain@gmail.com** | **Web: csitamilparishalain.org**




கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

....என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்க மாட்டாதுபோல, நீங்களும் எண்ணில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள்...யோவான் 15:4

Abide in me, and I in you. As the branch cannot bear fruit by itself, unless it abides in the vine, neither can you, unless you abide in me. John 15:4

கனிகொடுக்கவேண்டுமெனில்...

***ஆண்டவருடன் இணைந்து இருக்க வேண்டும்...**

***ஆண்டவரின் வார்த்தையில் நிலைத்து இருக்க வேண்டும்...**

***ஆண்டவருடன் அன்பாய் இருந்து பிறருடன் அன்பாய் இருக்க வேண்டும்....**

இதுவே கிறிஸ்துவுடன் இருந்து கனி கொடுக்கும் வாழ்வு ஆகும். இப்படிப்பட்ட வாழ்வை பெற நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.....

இந்த மாதத்தில் செப்டம்பர் 5-ஆம் தேதி நமது முன்னாள் ஜனாதிபதி டாக்டர். இராதாகிருஷ்ணன், அவர்களின் பிறந்தநாளை ஆசிரியர் தினமாக அனுசரிகிறோம். அந்த நாளில் கல்விப் பணியில் தங்களை அர்ப்பணித்திருக்கிற ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கவும், அவர்களுக்காக அவர்களின் ஒப்படைப்பு உள்ள பணிக்காக ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்..... மேலும் இந்த மாதம் செப்டம்பர் 27ஆம் நாள் நமது தென்னிந்தியத்திருச்சபை நிறுவன நாள் ஆகும். (CSI-DAY) அந்த நாளிலே நமது திருச்சபையின் தலைவர்களுக்காக, திருப்பணி யாளர்களுக்காக, திருச்சபைகளுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கிறோம். இந்த கோவிட் காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகள் புதிய கல்வி ஆண்டிற்குள் நுழைகிறார்கள் அவர்களின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக...உயர் கல்விக்கு சொல்லுகின்ற நமது பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும் வாழ்த்தவும் அழைக்கப்படுகிறோம்....

அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக இந்த விடுமுறை காலங்களில் நமது திருச்சபையின் வழியாக ஒழுங்கு செய்துள்ள The Proverbs Challenge-2021 என்ற போட்டி வருகின்ற செப்டம்பர் 3ஆம் தேதி நடைபெறுகிறது அதில் கலந்து கொள்ளும் நமது பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். அத்துடன் நம்முடைய திருச்சபையின் குடும்பத்தினர் இந்த விடுமுறையின் காலத்தில் தங்கள் சொந்த தேசத்திற்கு சென்றிருக்கிறார்கள் அவர்கள் மீண்டும் நல்ல முறையில் திரும்பி வருவதற்காக நல்ல பயணத்தை மேற்கொள்ள ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் இந்த கொரோனா என்ற கொள்ளை நோயில் இருந்து தேசங்கள் விடுவிக்கப்பட ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

*Rev. S. P. Baskar....*



# சங்கீதம்:10

## இறைவனின் நீதிக்காக மன்றாடல்



கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக்கேட்டிருக்கிறீர்; அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர். சங்கீதம்: 10:17

O Lord, you hear the desire of the afflicted; you will strengthen their heart; you will incline your ear. Psalm 10:17

**முன்னுரை**

சங்கீதம்:10. கடவுளின் நீதிக்காக ஜெபிக்கும் சங்கீதம் ஆகும். கடவுள் இல்லை, இறைவன் மறந்து விட்டார் என்று கூறி துன்மார்க்கர் (அ) தீயோர்கள் திட்டமிட்டு ஏழை எளியவரை, அனாதைகள், திக்கற்றவர்கள், ஒன்றும் தெரியாதவர்கள் இப்படிப்பட்டவர்களை, அடக்கி, ஒடுக்கி, நசுக்கி அழிக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் இந்த துன்மார்க்கர் (அ) தீயோர்கள், எல்லோரும் பொல்லாத பாவிகள், இவர்களின் சதி திட்டங்கள் அழித்து ஏழை எளியவர்களை மீட்க வேண்டும், அவர்களுக்கு உதவ வேண்டும், நீதி கிடைக்க வேண்டும் என்று ஜெபிக்கும் ஜெபம் ஆகும். இதில் கர்த்தாவே எழுந்தருளும்; தேவனே, உம்முடைய கையை உயர்த்தும்; ஏழைகளை மறவாதேயும். (சங்:10:12) என்ற அடியாரின் கூக்குரலுக்கு ஆண்டவர் திட்டமாய் செவி சாய்ப்பார் என்ற நம்பிக்கை வெளிப்படுகிறது. இது ஒரு நீதிக்கான ஜெபம் ஆகும்.

Psalm:10 See note on Psalm:9, Psalm:10 is a lament, relating to cases in which "the wicked hotly pursue the poor" (v.2) These wicked could be faithless, wealthy Israelites (v4,13) and the poor are Israelites who are faithful but are also defenceless against the wicked, it was the task of the Davidic king to ensure justice, by force if necessary, it was the task of the general public to pray perhaps by reciting a Psalm like this..

***சங்கீதம்: 10:1-11 பொல்லாதவரும் (அ) துன்மார்க்கர்-அவர்களின் சதி திட்டங்களும்..**

**வச:1**-கர்த்தாவே, ஏன் தூரத்தில் நிற்கிறீர்... இது கடவுளின் உதவியின்றி மனிதரின் இயலாத் தன்மையை காட்டுகிறது...

**வச:2,3**-துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமைப் பட்டவனைக் கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான்....

சிறுமைபட்டவர்கள்.. "அணி""அனாவ்"என்ற எபிரேயச் சொற்கள். ஏழைகள், எளியோர், சிறுமை பட்டவர்கள், தாழ்நிலையில் உள்ளோர், துயருறுவோர், ஒடுக்கப்பட்டோர், நசுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், ஆண்டவரே தஞ்சமெனக்கொண்டோர் என இவர்களை குறிக்கும் சொல் ஆகும். மேலும் இது இஸ்ரவேல் மக்களையும் குறிப்பதாகும்.....

**வச:4**- துன்மார்க்கன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லை என்பதே.... இது கடவுள் மறுப்புக் கொள்கை என்பது இல்லை தன்னுடைய கர்வத்தினாள் கடவுளைத் தேடாமல் சொல்வது கடவுளை அசட்டைப்பண்ணுவது ஆகும்..

**வச:11**- தேவன்... தம்முடைய முகத்தை மறைத்து.... என்பது துன்மார்க்கரின் எண்ணம் கடவுள் அநீதியைக் காணமாட்டார் என்றும் அதேவேளையில் தாம் படும் துன்பத்தை கடவுள் காணாதிருக்கிறார் என்று நினைக்கின்றனர். இவ்வாறு துன்மார்க்கர்களின் சிந்தனை இருந்தது....

**சங்கீதம்:10:12-15- ஆண்டவரே எழுந்து வந்து உதவும் என வேண்டுதல்...**
**வச:12**-கர்த்தாவே, எழுந்தருளும்... இது உடன்படிக்கைப்பெட்டியின் மேல் ஆண்டவர் தோன்றுவதைக் குறிக்கும், இது ஒரு ஆவிக்குரிய அனுபவம் ஆகும். தேவனே, உம்முடைய கையை உயர்த்தும் ஏழைகளுக்கும், நசுக்கப்பட்டவர்களுக்கும் இறங்கும் என வேண்டுதல் செய்வதாகும்...

**வச:15**-துன்மார்க்கனும், பொல்லாதவனுமாயிருக்கிறவனுடைய புயத்தை முறித்துவிடும்..... இது தீமை செய்பவர்களின் துணிவையும், வலிமையையும் அற்றுப் போவார்களாக என வேண்டுதல் செய்வதாகும்.... இவ்வாறு ஆண்டவரே.... எழுந்து வாரும் என்று வேண்டுதல் செய்வதாகும்.....

**சங்கீதம்: 10:16-18- ஆண்டவர் எளியோர் ஜெபத்தைக் கேட்கிறார்.....வச:16-** கர்த்தர் சதா காலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார்..... இது ஆண்டவர் அரசாள்கிறார், அரசர் என்பதாகும்... "மலாக்" என்று எபிரேயச் சொல் அரசாள்கிறார் என்பதாகும். "மெலெக்" என்ற சொல் அரசர் என்பதாகும்...

**வச:18-** தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கு, ஒடுக்கப்பட்டவர்கள், இது கடவுள் ஏழைகளின் கடவுள், அடிமைகளில் கடவுள், ஒடுக்கப்பட்டோரின் கடவுள், இவர்களின் மீது கடவுள் அதிக கரிசனை உடையவர் இவர்களின் ஜெபத்தைக் கேட்டு நீதி செய்வார் என்ற நம்பிக்கையோடு வேண்டுதல் செய்வதாகும்...

**முடிவுரை:**

இன்றைக்கும் கடவுள் நீதியுள்ளவர், பொல்லாதவர்களின் கையிலிருந்து எளியோரை மீட்டு வாழ்வை அளிப்பவர் என்பதை விசுவாசித்து நீதிக்காக, உண்மைக்காக நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
இறைப்பணியில் உங்கள் ஆயர்

Rev.S.P.Baskar....




**மோசே அந்த மனிதனிடத்தில் தங்கியிருக்கச் சம்மதித்தான். அவன் சிப்போராள் என்னும் தன் குமாரத்தியை மோசேக்குக் கொடுத்தான்..**
யாத்திராகமம் 2:21

**And Moses was content to dwell with the man, and he gave Moses his daughter Zipporah.... Exodus 2:21**

**முன்னுரை**

மேதினியா என்று அழைக்கப்படும் ஊரைச் சேர்ந்தவர். எத்ரோவின் மூத்த மகள் (யாத்:2:21-25) இவருக்கு ஆறு சகோதரிகள் உண்டு. இந்து ஆறு பேரில் மோசே மூத்த மகளான சிப்போராளை திருமணம் செய்து கொள்கிறார். ஆனால் மோசேயுடன் இறுதிவரை இவர் பயணம் செய்யவில்லை. மோசேயுடன் வனாந்திரத்தில் பயணம் செய்தபோது இரண்டு மகன்களை பெற்றெடுத்திருக்கிறார்.(கெர்சோம், எலியேசர்) என்பவர்கள் ஆவார்கள்...

**சிப்போராள் கணவருடன் பாடுகளை சந்தித்தவர்**

சிப்போராள் தம்முடைய கணவரை அதிகமாக நேசித்தார், எனவேதான் கடவுளின் விடுதலைப் பணியில் தன் கணவரோடு இணைந்து பாடுகளையும், துன்பங்களையும் ஏற்றுக்கொண்டார். தன்னுடைய கணவருடைய கோபதாபங்களை தாங்கிக் கொண்டார். அத்துடன் தம்மை மறைத்து தம்முடைய கணவருடைய பணிக்கு முன்னுரிமை வழங்கினார். இதனால்தான் இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பணியில் மோசேயின் பணி முன்னுரிமை பெற்று சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது.....

**சிப்போராள் தன் கணவனுக்கு நல்ல தோழி**

சிப்போராள் தன் கணவருக்கு நல்ல தோழியாக தன்னுடைய மனதில் நிறுத்திக்கொண்ட பெண் ஆவார். சிப்போராள் என்ற பெயரின் பொருள் சிறு குருவி என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட குருவிகளின் வாழ்நாள் என்பது குறைவானதாகும். ஆனால் சிப்போராள் நிறைவான வாழ்வை காண்பித்து இஸ்ரவேலரின் விடுதலைப் பணியில் தடம் பதித்து வாழ்ந்து காட்டியவர் சிப்போராள் ஆவார். இஸ்ரவேல் மக்களின் விடுதலை வாழ்வுக்கு தன்னுடைய கணவருடன் இணைந்து கடவுளின் பணியை செய்து சிறப்பு தன்மை பெற்றவர் ஆவார்....

**முடிவுரை**

இன்றைக்கு கடவுளில் விடுதலைப் பணியில் சிப்போராள் போல தன்னுடைய கணவருடன் இணைந்து கடவுளின் பணியில் பாடுகளையும், துன்பங்களையும் ஏற்று செயல்பட நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆண்டவரே உன்னத பணியில் உங்கள் ஆயரம்மா....
Mrs. E. Nancy Baskar...



# செயலரிடமிருந்து...

பிரியமானவர்களே...

இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். புதிய பெலத்தோடு புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இந்த ஆண்டின் எட்டு மாதங்களை கடந்துவர கர்த்தர் நமக்கு உதவி செய்து நம் குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்தி நம் கையின் பிரயாசங்களை ஆசிர்வதித்த தேவாதி தேவனை நன்றி நிறைந்த உள்ளதோடு போற்றுவோம். திருச்சபை மக்கள் பலர் தங்கள் விடுமுறை நாட்களில் தங்கள் அன்பான பெற்றோர், குடும்பத்தார் மற்றும் நண்பர்களை கண்டு; சந்தோஷமாய் விடுமுறை நாட்களை கழிக்க கர்த்தர் கிருபை கூர்ந்தார். மறுபடியும் இந்த தேசத்திலே திரும்பி வரவும், தேவன் நமக்கு தந்த பணியினை புதிய பெலத்தோடு தொடர்ந்து செய்யவும் கிருபையளித்த தேவனை முழுமனதாய் போற்றுவோம்.

திருச்சபையின் அனைத்து ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெறுங்கள். உங்களது அனுதின ஜெபம் மாதாந்திர பொருளுதவி, ஊழியத்தின் கரிசனைக்காக தேவனை துதிக்கிறேன். திருச்சபையின் வளர்ச்சியில் தொடர்ந்து உங்கள் ஆதரவை தாருங்கள். வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

கர்த்தர் மென்மேலும் உங்களையும், உங்கள் குடும்பத்தார் அனைவரரையும் ஆசீர்வதிப்பாராக. தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..

இப்படிக்கு
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

# எப்படி நான்...?

கல்வாரியை பாடிவிட்டு எப்படி நான்
கயவனாய் இருந்தேன்?

பரிசுத்தர் என்று போற்றிவிட்டு எப்படி நான்
பரிசுத்தம் இழந்தேன்?

மார்போடு அனைத்தவரை விட்டு விட்டு எப்படி நான்
மாயலோகத்தை தேடிப்போனேன்?

மகிபனை மகிமைப் படுத்திவிட்டு எப்படி என்
மனம் மாசுப்பட விட்டு விட்டேன்?

வருகையை பேசிவிட்டு எப்படி நான்
வருபவரைத் தேடாமல் இருந்தேன்?

விண்ணுக்குரியவரை போற்றிவிட்டு எப்படி நான்
வீணானவைகளை ஏன் நாடிப் போனேன்?

உதடுகளால் பாடிவிட்டு எப்படி நான்
உள்ளத்தால் ஏன் தூரப்போனேன்?

தூயவர் என்று துதித்துவிட்டு எப்படி நான்
உள்ளத்தால் ஏன் துரோகம் செய்தேன்?

திடம் பெற பரிசுத்தாவியின் நிறைவை
எப்படி நான் நாடாமல் இருந்து விட்டேன்

கண்களுக்கு காவல் வைக்க எப்படி நான்
மறந்து விட்டேன்

கண்ணியமாய் வாழ கல்வாரி அன்பில் நிறைய
எப்படி நான் மறந்து விட்டேன்

தினம் காலை மாலை ஆராதனையும்
வேத வாசிப்பையும் எப்படி நான் விட்டு விட்டேன்

விட்டு விட்டவைகளை விடாமல்
செய்ய தீர்மானித்து விட்டேன்

**வருகையில் சேர்ந்திட**
**அநேகரை சேர்த்திட**
**வருபவரை நாடிவிடேன்**






MEN'S FELLOWSHIP ARTICLE

# சிறுமையும் எளிமையும்

குழந்தை இல்லாத அன்னாள் தன் சக்களத்தியால் நிந்திக்கபட்டாள்,மிகவும் அவமானபடுத்தப்பட்டாள் அவள் பரியாசம் பன்னப்பட்டாள் ,அவள் அழுது புலம்பினாள்,அவளது கணவன் அவளை தேற்றினான் ,ஆனால் அவள் ஆலயத்திலே தேவ சமூகத்தில் போய் கதறி அழுதாள். அங்கிருந்த ஆசாரியன் அவள் குடித்திருப்பதாக எண்ணிக்கொண்டு அவளை கடிந்துகொண்டான். அவள் தேவனை நோக்கி உமது அடியானின் சிறுமையை கண்ணோக்கி பார்த்து உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி உமது அடியாருக்கு ஒரு ஆண் பிள்ளையை கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன் என்றாள். என்ன ஒரு சுய நலமில்லாத ஜெபம். நம்முடைய ஜெபம் கேட்கப்படாததற்கு நம்முடைய சுய நலமுள்ள ஜெபங்களே காரணமாக இருக்கிறது. யாக்கோபு 4'ம் அதிகாரம் 3'ம் வசனத்தில் இச்சைகளை நிறைவெற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்கிறார். பிரியமானவர்களே இந்த கடைசி காலத்தில் நம்முடைய விண்ணப்பம் தேவனுடய ராஜ்யத்திற்கு அடுத்தவையாக இருக்க வேண்டும்.

அந்நாளின் ஜெபம் கேட்க்கப்பட்டு அவளுக்கு பிறந்த சாமுவேலை கர்த்தருக்கு அற்பணித்தாள் . அவள் சொன்னால் அவன் கர்த்தருக்கென்று கேட்கபட்டபடியினால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள். தேவன் சாமுவேலோடு பேசினார் அவன் ராஜாக்களை ஏற்படுத்தினான் . இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தான். அவனை பார்த்து ராஜாக்கள் பயந்தார்கள் அன்னாளின் வாழ்க்கையில் ஒரு நிந்தை ஒரு சிறுமை அனுமதிக்கப்பட்டதால் அவள் தேவ சமுகத்தில் கதறி அழுது வாக்குத்தத்தத்தை பெற்று கொண்டாள். அவளுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தின் மூலம் ராஜாக்கள் உருவாக்கப்பட்டு ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

பிரியமானவர்களே நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு காரியத்தில் சிறுமை படுத்தப்படுகிறீர்களா?

**Women's Fellowship Article / by Mrs. Jonish Herchil**

உங்களை பரியாசம் பண்ணுகிறார்களா ?

நீங்கள் தேவ சமூகத்தில் கதறி அழுது வாக்குத்தத்தை பெற்றுக்கொள்ளுங்கள். ஒரு வேளை ஒரு பெரிய காரியம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேற இந்த சிறுமை தேவனால் அனுமதிக்கபட்டிருக்கலாம். ஒரு வேளை அன்றைக்கு அந்த சிறுமை அனுமதிக்கப்படவில்லையென்றால் அவள்போக்கில் அவள் வாழ்ந்திருப்பாள். தேவனிடம் இருந்து வாக்குத்தத்தத்தை பெற்றிருக்கமாட்டாள். தேவ சமூகத்துக்கு சென்றிருக்கமாட்டாள்.




ரோமர் 8:28 அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்

என்பதை உணர்ந்து ஜீவிக்கிறவர்களாய் சகலமும் நன்மையாய் மாறும்படி தேவ சமூகத்தில் தரித்திருங்கள்.

ஆமென்.




# உன்னுடனே இருக்கிறேன்

**“என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னுடனே இருக்கிறேன்” (எரேமியா 46:28).**

தேவன் தாமே இந்த இடத்தில் தம்முடைய மக்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிற அருமையான வாக்குத்தத்தத்தை வாசிக்கிறோம். ‘நீ பயப்படாதே’. ஆம்! நம்மை பயப்படாதே என்று மாத்திரம் சொல்லவில்லை, ஏன் பயப்பட வேண்டாம் என்பதை குறித்தும் சொல்லுவதைப் பார்க்கிறோம்.

‘நான் உன்னுடனே இருக்கிறேன்’.


ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மற்றொரு பெயர் இம்மானுவேல். அதன் பொருள் தேவன் நம்மோடிருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. எனவே தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயத்தோடு வாழுகிற ஒரு வாழ்க்கை நம்மிடத்தில் உண்டா? அவருடைய வார்த்தை நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நாம் விசுவாசிக்கிறோமா? நீங்கள் அதை நம்பும்பொழுது, நிச்சயமாக தேவன் உங்களோடு கூட இருக்கிறார் என்பதைச் சொல்ல முடியும்.

மோசேயின் மரணத்திற்கு பின்பு யோசுவாவை பார்த்து தேவன், “நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” (யோசுவா1:5). என்று சொன்னார். இங்கே தேவன் யோசுவாவை தைரியப்படுத்துவதைப் பார்க்கிறோம். யோசுவா இவ்வளவு பெரிய ஒரு பணியைச் செய்யும் படியான வேளையில் ஆண்டவர் இவ்விதம் யோசுவாவைப் பார்த்துச் சொல்லுகிறார். மோசே இல்லாத இந்த

சூழ்நிலையில், எவ்விதமாக இந்த இஸ்ரவேல் மக்களை வழி நடத்துவது என்று யோசுவா பயந்து கொண்டிருந்த வேளை அது.

இஸ்ரவேல் மக்கள் முரட்டாட்டமுள்ள ஜனங்கள் என்று யோசுவா பார்த்திருந்தாலும், ஆண்டவர் இந்த இடத்தில் நான் உன்னுடனே கூட இருக்கிறேன், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொன்னார். தேவன் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடமாட்டார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அப்பொழுது ஆண்டவர் நமக்கு மிகப் பெரிய காரியத்தை செய்வார்.

நடைமுறை வாழ்க்கையில் தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற உணர்வோடு நம்மால் வாழ முடிகிறதா என்பதை சிந்தித்துப் பார்போம்.



விளக்கின் அடியில் படர்ந்து கிடக்கும் இருட்டு
யாருக்கும் தெரிவதில்லை
சிரிப்பின் பின்னே சிதறிக்கிடக்கும் சோகம்
யாருக்கும் புரிவதில்லை


விளக்கும் நாங்கிடமும் ஒளிவீச
தீ சுடர் கொழுந்தனுமே..
இதயமும் சோகம் நீங்க
நேச அனல் குரல் எழும்பனுமே..!

யார் புரிவார் இவ்விலக்கியம்
என்று மனமே சோராதே..
கர்த்தர் குரல் கேட்கும் அனைவரும்
அறிவர் அன்பின் இலக்கணமே..!!!

# PRAYER



Prayer is one of the most important activities in our lives because we're actually talking to the sovereign God of the universe who has all power and knowledge. He understands how we feel, knows what we think, and has the power to intervene in every area of life. Yet despite the Lord's willingness to listen and answer our requests, we are not always faithful in prayer.
When times are good, we may forget to pray. Or maybe we doubt that God will answer. But the biggest hindrance to prayer is sin. If we're unwilling to acknowledge our sins and ask for the Lord's forgiveness, we'll have no desire to talk to a holy God.




True prayer is a way to grow in our relationship with the Lord. All relationships require two-way communication. Instead of just speaking our prayer requests, we must also listen to the Lord. Since His Word is the primary way He speaks to us, our prayer times should include Bible reading.
When the Lord has an answer for us from His Word, it's amazing how He can take us to the exact Scripture passages we desperately need. However, if we pray yet fail to listen, we'll miss the blessing of hearing from Him and will be no better off than before.

The time we spend with the Lord affects our lives in a variety of ways.

- It's the method God uses to meet our needs (Philippians 4:19).
- He comforts us in our times of trial and heartache by assuring us of His presence with us and His willingness to help us.
- Prayer is a channel through which we build an intimate relationship with God and sense His love for us.





- The Lord strengthens us in times of temptation as we believe His promises and seek His help (1 Corinthians 10:13).

The Scriptures repeatedly tell us to devote ourselves to prayer (Col. 4:2).

Devotion requires that we not only set aside uninterrupted time for prayer, but that we also think seriously about what we're asking. We must give God the time and attention He deserves in order to have a growing relationship with Him.

Rejoice always, pray continually, give thanks in all circumstances; for this is God's will for you in Christ Jesus.


(1 Thessalonians 5: 16-18)



**Article by:**

**Mr. Roshan**

**Intermediate**



# Facts about the Bible

Article by: Joshua Koshy

1. Over a 100 million copies of the bible are bought every year.
2. The full bible has been translated in 532 languages.
3. The shortest verse in the bible is 'Jesus wept'.
4. Esther 8:9 is the longest verse in the bible.
5. The shortest chapter in the bible is psalms 117.
6. It took over a thousand years to write the Old Testament the New Testament took 50-70 years.
7. China is not only the largest producer of goods but also the largest producer of the bible.
8. The bible does not mention how many wise men came to meet Jesus it only mentions the gifts.
9. Bible is the bestselling book. It has sold about 5 billion copies.
10. The word Christian occurs 3 times in the bible.
11. Mahershalalhashbaz is the longest word in the bible.
12. Bible is the most commonly stolen book in the world.
13. The world's largest bible weighs 1,094 pounds.
14. There are a total of 188 named woman in the bible.
15. The world's smallest bible is the Nano bible.
16. Enoch and Elijah are the only people who did not die a natural death.
17. The book of Esther never mentions God's name.
18. There are a total of 365 verses in the bible which tells us not to fear.
19. The last word in the bible is Amen which means 'so be it'.
20. The centre verse of the whole bible is psalm 118:8



Kinder BEGINNERS





# GOD'S PROMISES


Primary

Use the Key below to complete the verses about God's promise to Joshua.
How do you think Joshua felt after hearing God's Promise..?


"There shall not _ _ _ _ _ _




be able to _ _ _ _ _ before thee all the




_ _ _ _ of thy life: as I was with



_ _ _ _ _, so will I be with thee. I will not




_ _ _ _ thee, nor forsake thee."



Joshua 1:5 KJV

KEY



JUNIOR

# MOTHERS OF THE BIBLE

There's been a mother mix-up! Can you fix it? On the left side, match the son or daughter-in-law with the correct mother. On the right side, match the clue with the correct mother.

| Son or daughter-in-law | Mother | Clue |
|---|---|---|
| A. Solomon | ____ REBEKKAH ____ | I. An angel told me I would have a baby Who would be the Son of God. (Luke 1:34-35) |
| E. Isaac | ____ MARY ____ | R. I put my baby in a basket. (Exodus 6:20, Exodus 2:1-3) |
| H. John | ____ RAHAB ____ | O. I laughed when God promised me a child in my old age. (Genesis 18:9-14, Genesis 21:1-3) |
| R. Moses | ____ ELIZABETH ____ | G. I used goat skins and a tasty meal to help my son trick his father. (Gen. 27:15-17) |
| S. Timothy | ____ HANNAH ____ | M. Both my sons died, but my daughter-in-law stayed with me and blessed me. (Ruth 1:16-20) |
| A. Ruth | ____ JOCHEBED ____ | O. My mother, Lois, and I faithfully taught my young son God's truth. (2 Timothy 1:5) |
| M. Jacob | ____ EUNICE ____ | D. My son became a wise and wealthy king of Israel. (1 Kings 1:28-30) |
| E. Samuel | ____ NAOMI ____ | F. I promised to give my son back to the Lord which is why he grew up in the house of the Lord. (1 Sam. 1:20) |
| R. Cain | ____ EVE ____ | T. My baby leaped in my womb when Jesus came near. (Luke 1:13, 41-45) |
| O. Jesus | ____ SARAH ____ | F. After protecting some Israelite spies, I became the great, great grandmother of King David. (Joshua 6:25; Matthew 1:5-6) |
| T. Boaz | ____ BATHSHEBA ____ | G. I was called the mother of all living. Genesis 3:20, 4:1) |





INTERMEDIATE

SENIOR

Questions ? ? Answers ?

John 20:1 KJV
Define the word - SEPULCHRE

___

John 20:7 KJV
Tell where the napkin and linen clothes were. How were they folded?

___

John 20:16 KJV
Define the word- RABBONI

___

John 20:17 KJV
What did Jesus mean when he told Mary, "TOUCH ME NOT"?

___

John 20:22 KJV
When Jesus breathed on his disciples, what happened?

___

John 20:24 KJV
Explain why Thomas also known as Didymus was upset and did not believe Jesus had risen.

___


Find the bible scripture in the book of John for this verse- But these are written, that ye might believe that Jesus is the Christ, the Son of God; and that believing ye might have life through his name.

___

John 19:24 KJV
What is casting lots mean?

___

# ரோமர்




## SEP'21 QUESTIONS

1. எதைக் குறித்து பகைஞராயிருக்கிறார்கள்?
2. தேவனுடைய ஐசுவரியம்---------------,------என்பவைகள் ஆகும்..
3. எதனால் மறுரூபமாகுங்கள் என்று சொல்லப்பட்டது?
4. மாய மற்ற அன்பு என்பது எது?
5. அதிகாரத்தை எதிர்க்கிறவன் எதற்கு எதிர்த்து நிற்கிறான்?
6. எதற்கு கீழ்ப்படிய வேண்டும்?
7. கர்த்தருக்கென்று எதை விசேஷத்துக்கு கொள்கிறான்?
8. யார் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க படுவார்?
9. எருசலேமில் உள்ள தரித்திரருக்கு யார் பொருள் கொடுக்க விரும்பினார்கள்?
10. பெபேயாள் எந்த சபைக்கு ஊழியக்காரி?

**ஆகஸ்ட்'மாத விடைகள் / எழுதியவர்கள்**

1. ரோமர்: 1:22 | 2. ரோமர்: 2:10 | 3. ரோமர்: 3:13 | 4. ரோமர்: 4:7
5. ரோமர்: 5:7 | 6. ரோமர்: 6:7 | 7. ரோமர்: 7:23 | 8. ரோமர்: 8:8
9. ரோமர்: 9:13 | 10. ரோமர்: 10:17

---

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. ஹெலன் கம்பீரம், செல்வி. அஜீன்ஷா, செல்வி. ஷெறின்ஷா, திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. பமீலா டேனியல், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, செல்வி. ஜோஷிகா வஷினி, செல்வி..ஜெரின் மேக்டலின், திருமதி. ஷெரின் டியென்ஷன், திருமதி. அனிதா.எஸ்.ராஜன்

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

**Your Name / Bible Quiz / June'21 | Sent to: csitcalain@gmail.com**

# தமிழ் வேதாகமத்திலுள்ள அர்த்தம் புரியாத வார்த்தைகள்



| | | |
|---|---|---|
| அவயங்காத்தல் | *அடை காத்தல்* | எரே 17:11 |
| அவிழ்தம் | மருந்து | எரே46:11;<br>எசே47:12 |
| அழிம்பு | அழிவு | எரே 6:7, 2சாமு 14:11,<br>தானி 8:24 |
| அழுங்கு | அறனை அகழெலி | லேவி 11:30 |
| அளகபாரம் | கூந்தல் | |
| றுதி | நிரந்தரம் | லேவி 25:23 |
| அறுமீன் | கார்த்திகை<br>விண்மீன் | யோபு 9:9; 38:31 |
| அஸ்தகடகம் | கழுத்து பொற்<br>சங்கலிகள் | யாத் 35:22; எண் 31:50;<br>2சாமு 1:10; ஏசா 3:19 |
| அஸ்திராயுதம் | படைக்கருவி | எரே 50:25;51:20 |
| அஸ்வங்கள் | குதிரைகள் | எரே 8:16 |
| ஆகடியம் | ஏளனம் | நீதி 1:26,27; 6:12;<br>எசே 25:6; ஆப 1:10 |
| ஆகாமியம் | தீயகுணம்,<br>தீமை, பொல்லாங்கு | நீதி 4:17 |
| ஆக்கினை | தண்டனை | யாத் 21:28 |
| ஆசாரங்கள் | மரபுகள்,<br>ஒழுங்குகள் | மாற் 7:4 |

# September Birthdays List

| | |
|---|---|
| 01 | Mstr. Allen Riyo S/o Mr. Robert Wilson |
| 02 | Mrs. Shafeena W/o Mr. Joel Renjith Kumar |
| 04 | Mrs. Jamuna Rani W/o Mr. Anthony Jesu Rajan |
| 04 | Mr. Celin Jose |
| 08 | Ms. Divya Dharshini D/o Mr. D. Rajavel |
| 09 | Ms. Abighail D/o P. Davidraj |
| 09 | Mr. Vinith J.Samuel |
| 10 | Mrs. R. Muneeswari W/o Mr. Ravichandran |
| 10 | Mrs. Shiby Angel W/o Mr. Sunith Samuel |
| 10 | Mr. Asphin Raj . P |
| 11 | Baby. Jemima Ashni D/o Mr. Suresh Rajan |
| 12 | Mrs. Pamela Jeniffer W/o Mr. Vijin Raj |
| 17 | Mr. Nelson Sopitha Raj |
| 20 | Ms. Jamie Shino Mathew D/o Dr. Shino Mathew |
| 21 | Mr. S. Jesvin Bose S/o Mr. Selvakumar |
| 23 | Ms. Sharon S. Rao D/o Mr. Danesh Yogendra Rao |
| 24 | Mr. Danesh Yogendra Rao |
| 27 | Ms. Pragathi D/o Mr. Ravichandran |
| 28 | Ms. S. Divya Sherrin W/o Mr. Dienshan |
| 29 | Mrs. Sugitha Isravel W/o Mr. Praveen Paul |

"MAY HE GRANT YOU
YOUR HEART'S DESIRE AND
FULFIL ALL YOUR PLANS...!"







# September

| | |
|---|---|
| 3 | MR. CHANDRASEKAR & MRS. P. HARIKA |
| 5 | MR. PRAVEEN PAUL & MRS. SUGITHA ISRAVEL |
| 7 | MR. SURESH RAJAN & MRS. ANITHA S RAJAN |
| 8 | MR. ANTONY HELVIN GERALD & MRS. ESTHER |
| 9 | MR. DANESH RAO & MRS. ANNIE SELVI |
| 11 | MR. VINITH J.SAMUEL MRS. M. AISHWARIYA |
| 15 | MR. PRINCE EMMANUVEL MRS. JOSEPHINE NIMSHI |
| 16 | MR. D. RAJAVEL & MRS. JEIN ARUPUTHAKANI |

**May the Lord Bless You and Keep you for More years to Come**








MRS. SHALY MELBIN
056 394 1817

MR. HERCHIL HARISH
056 252 4659

MRS. PAMELA DANIEL
050 595 1445


| | |
|---|---|
| REGISTRATION: | REGISTER YOUR NAMES TO PARTICIPATE, **NO** REGISTRATION FEES. |
| LANGUAGE: | ENGLISH (NKJV) OR TAMIL ONLY. |
| AGE: | THIS CHALLENGE IS FOR CHILDREN'S UNDER 18 YEARS OF AGE. |
| VERSES: | THE TOTAL PROVERBS IS SET TO 60 VERSES ONLY IT IS ENCOURAGED THAT ALL PARTICIPANTS TRY TO LEARN ALL THIS 60 VERSES. IF NOT... YOU SHALL CHOOSE ANY NO OF PROVERBS WITHIN THIS 60 AND RECITE THEM ON THE FINAL DAY. |
| DAILY VERSE: | STARTING FROM JULY'1ST UNTIL AUG'29TH 2021 - EVERY DAY ONE BIBLE PROVERB WILL BE PUBLISHED CIRCULATED IN PROVERBS CHALLENGE WHATSAPP GROUP. |
| WHATSAPP GROUP: | ALL PARTICIPANTS OR PARTICIPANT'S-PARENT SHOULD JOIN THE GROUP TO GET THE DAILY VERSES AND FOR THE PROGRAM UPDATES (IF ANY). |
| DAILY VERSE HARD COPIES: | IN ADDITION TO WHATSAPP; HARD COPIES OF 60 PROVERBS WILL BE GIVEN TO PARTICIPANTS IN ALAIN, UAE. FOR OTHERS PDF FORMAT SHALL BE CIRCULATED. |
| MEETINGS: | INTRODUCTION SESSION TO PROVERBS CHALLENGE WILL BE HELD ON 28TH JUNE 21 WITH ALL PARTICIPANTS TO EXPLAIN THE PROCEDURES. |
| FINAL DAY: | THE PROVERBS CHALLENGE WILL BE CONDUCTED VIA ONLINE PLATFORM ZOOM) ON (SEPTEMBER 3RD, 2021 AT 2:00 PM UAE TIME. |

75Th CSI DAY

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

Best wishes!



From

**CSI Tamil Parish Al Ain, UAE**


EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE

TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343

**Email: csitcalain@gmail.com**

**Web: csitamilparishalain.org**



STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY